அரக்கோணம் நகராட்சி
சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.62 நாள்..28.09.2020.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்.30.09.2020 புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

அரக்கோணம் நகராட்சி 30.09.2020 புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர்(பொ) (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட்/2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 02**

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட 44 எண்ணிக்கை பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்களை (BOV) ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள 09.09.2020 அன்று மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **விவரம்** | **ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் (GST உட்பட) விலை ரூ** | **குரு ஏஜென்ஸி அரக்கோணம் (GST உட்பட) விலை ரூ** |
|---|---|---|---|
| 1 | 44 எண்ணிக்கை பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்களை (BOV) ஆண்டு பராமரிப்பு பணி செய்தல் **(ஒரு வாகனத்திற்கு ஒரு மாதத்திற்கான பராமரிப்பு தொகை ரூ.)** | 1,100/– | 1,300/– |

மேற்காணும் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம்,** நிறுவனத்திற்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகை வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 672/எச்1/2020)**

**பொருள் எண் 03**

இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் 117 துப்புரவு பணியாளர்கள், 4 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், மற்றும் 4 ஓட்டுநர்களுக்கு (**Shoes**) 2020–2021 ம் ஆண்டிற்கு காலனிகள் கொள்முதல் செய்து கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 09.09.2020 அன்று மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **விவரம்** | **குரு ஏஜென்ஸி அரக்கோணம் (GST உட்பட) விலை ரூ** | **D.R.ஏஜென்ஸி அரக்கோணம் (GST உட்பட) விலை ரூ** |
|---|---|---|---|
| 1 | 117 துப்புரவு பணியாளர்கள், 4 துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு காலனி வழங்குதல் மற்றும் 4 ஓட்டுநர்களுக்கு (**Shoes**) காலனிகள் | 40,000/- | 42,000/- |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய குரு ஏஜென்ஸி, அரக்கோணம், அவர்களுக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும், அதற்கான செலவின தொகை ரூ.40,000/– வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான செலவின தொகை ரூ.40,000/– வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்586/எச்1/2020)**

**பொருள் எண்.04**

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்திய பிறகு ஈக்களை கட்டுபடுத்தவும் மற்றும் கால்வாய் கழிவுகளை அகற்றிய பின் துர்நாற்றம் வீசாமல் இருக்கவும் லெமன் கிராஸ் ஆயில் (LEMON GRASS OIL) தெளிப்பதற்கு 200 லிட்டர் லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்து கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 09.09.2020 அன்று மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | விவரம் | குரு ஏஜென்ஸி அரக்கோணம் (GST உட்பட) ஒரு லிட்டர் விலை ரூ | D.R.ஏஜென்ஸி அரக்கோணம் (GST உட்பட) ஒரு லிட்டர் விலை ரூ விலை ரூ |
|---|---|---|---|
| 1 | லெமன் கிராஸ் ஆயில் (LEMON GRASS OIL) (1 லிட்டர்) | 2950/- | 3200/- |

மேற்காணும் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **குரு ஏஜென்ஸி, அரக்கோணம்,** நிறுவனத்திற்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகை வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u> பொதுசுகாதார நலன் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 688/எச்1/2020)**

**பொருள் எண் 05**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் டிப்பர் லாரி எண். TN73 W 2316 தகுதி சான்று பெறவும் பழுது நீக்கம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 17.09.2020 அன்று மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண் | லாரி எண் | ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஓர்க்ஸ் திருத்தணி.631209 (GST 18 % உட்பட ) | வேலு மோட்டார் ஓர்க்ஸ் மனைஎண் 105, 100 அடி ரோடு வேலச்சேரி சென்னை (GST 18 % உட்பட) |
|---|---|---|---|
| 1 | TN73 W 2316 | 1,96,470/- | 2,09,096/- |

மேற்காணும் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஓர்க்ஸ், திருத்தணி** அவர்களுக்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.669/எச்1/2020)**

**பொருள் எண் :06**

இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் 117 துப்புரவு பணியாளர்கள், 4 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், மற்றும் 4 ஓட்டுநர்களுக்கு 2020–2021 ம் ஆண்டிற்கு காலனிகள் ஒப்பந்தப்புள்ளி பெற்று கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.0.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 586/எச்1/2020)**

**பொருள் எண் 07**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் நீரேற்றும் நிலையத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 3.00 மில்லியன் லிட்டர்கள் வீதம் குடிநீர் நகருக்கு சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஜீப்ளி ரோடு உயர்நிலை நீர் தேக்க தொட்டி மூலம் குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. எனவே, நகராட்சி மூலம் மேற்படி இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டி சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் கலந்து விநியோகம் செய்யபட்டு வருகிறது. மேற்படி சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் 2020–2021ம் ஆண்டு சப்ளை செய்ய மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கான மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்தினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2018/இ1**

**பொருள் எண் .08**

இந்நகராட்சியில் 2020–21 ஆம் நிதி ஆண்டிற்குக்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், கணிணி பயன்பாட்டிற்கு தேவையான டோனர்கள் தேவைப்படுவதால் 3 லட்சத்திற்கு பொருட்கள் The George Town Multipurpose Industrial Co-operative சென்னை அச்சகத்தில் வாங்கிக் கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> **பொது நிதியிலிருந்து எழுது பொருட்கள் The George Town Multipurpose Industrial Co-operative சென்னை அச்சகத்தில் வாங்கிக் கொள்ளவும் ரூ. 3 லட்சம் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.804/பி2/2013)**

**பொருள் எண் .09**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தெருவிளக்கு பராமரிப்பு பணிகள், தலைமை நீரேற்றும் நிலையங்கள், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், சின்டேக்ஸ் நீர்தேக்க தொட்டிகள், நகராட்சி அலுவலக கட்டிடம், மருத்துவமனைகள், (IPPU) நகராட்சி பள்ளிகள், கழிவு நீர்தேக்க தொட்டிகள், குப்பை கிடங்குகள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் போன்ற இடங்களில் புதிய மின் இணைப்பு பெறுவது, பழுதான மின் எனர்ஜி மீட்டறை மாற்றி அமைப்பது போன்ற பணிகள், மேலும் நகராட்சி பணிக்கு இடையூராக உள்ள மின் கம்பங்கள், மின் கம்பிகள் மற்றும் மின் பகிர்மான பெட்டிகள் ஆகியவற்றை இடமாற்றும் செய்வது மற்றும் புதியதாக அமைப்பது போன்ற பணிகளுக்காக மின்வாரியங்கள் மூலமாக வரப்பெறும் மதிப்பீடு தொகைகளை செலுத்திடவும், அதற்காக ஆகும் உத்தேச ஆண்டு செலவினத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. பணியின் அத்தியாவசியம் (ம) அவசரம் அவசியம் கருதி மேற்படி பணிகளுக்கு மன்றத்தி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.887/இ1/2018)**

**பொருள் எண் .10**

வருவாய் நிர்வாக ஆணையரகம், பேரிடர் மேலாண்மை சென்னை–05 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.N C I (4) /1875/2020 நாள்.26.08.2020ன்படி வட கிழக்கு பருவ மழை – 2020 க்கான தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தியதற்கிணங்க, தேவையான உபகரணங்களான மணல் முட்டைகள், டீசல் இன்ஜின்கள், டீசல் ஜெனரேட்டர், மண்வெட்டிகள், பீளிட்சிங் பவுடர், பீனாயில், லைம் பவுடர் மற்றும் இதர உபகரணங்களை கொள்முதல் செய்ய தோராய மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்**

**2. மேற்படி உபகரணங்களை பணியின் அத்தியவாசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2018**

**பொருள் எண் .11**

வட கிழக்கு பருவ மழை – 2020 க்கான தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு நகர பகுதிகளில் உள்ள நீர் நிலைகளை தூர் வாரி சுத்தம் செய்ய தோராய மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.787/இ1/2020)**

**பொருள் எண் .12**

நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர்–12, அவர்களின் கடிதம் ந.க.எண்.465/2020/அ3 நாள்.07.02.2020ன்படி திண்டிவனம் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரியும் திருமதி. மரியம்மாள் க/பெ. சுப்ரமணியன் என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக அரக்கோணம் நகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்திற்கு பணியிட மாறுதல் செய்யுமாறு நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர்–12, அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளதை தொடர்ந்து அரக்கோணம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் காலியாக

உள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்தில் பணியிட மாறுதலில் (திருமதி.மரியம்மாள் க/பெ சுப்ரமணியன் துப்புரவு பணியாளரை) செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** திருமதி.மரியம்மாள் க/பெ சுப்ரமணியன் துப்புரவு பணியாளர் திண்டிவனம் நகராட்சி அவர்களின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு பணியிட மாறுதல் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.000139/எச்2/2020)

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**